## ஆவடி, பூவிருந்தவல்லி, ராமாபுரம் இடங்களில் கள ஆய்வு

# “சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுக்கான 34 அறிவிப்புகளில் விரைவில் திட்ட அறிக்கை: 3 மாதங்களில் பணிகள் துவங்கும்”

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

சென்னை, மே 36–

முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நடப்பு நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் இன்று (26–ந் தேதி) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி, அன்னனூர், கோணம்பேடு அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் அமைக்கப்படுவது தொடர்பாகவும், பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரையான்சாவடி அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விளை யாட்டு அரங்கம் அமைக்கப்படுவது தொடர்பாகவும் மற்றும் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை, ராமாபுரத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்படுவது தொடர்பாகவும் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமியும் இந்த கள ஆய்விலே பங்கேற்றார்.

பின்னர் அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:– மீதமிருக்கின்ற இன்னும் 3 இடங்களை கள ஆய்வு மேற்கொண்டு தொகுதி மேம்பாட்டுக்கான 34 அறிவிப்புகளில் 34 இடங்களையும் முழுமையாக கள ஆய்வு செய்து, விரைவில் திட்ட அறிக்கையை தயாரித்து ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் இந்த 34 இடங்களிலும் பணிகளை துவக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இதுவரையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் இல்லாத அளவிற்கு இந்த முறை 50 பணிகளை சட்டப்பேரவையிலே அறிவித்திருக்கின்றோம். இந்த 50 பணிகளையும் வேகப்படுத்தி தினந்தோறும் இந்த பணிகளை குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்து அதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.



இந்த ஆய்வுகளின்போது நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, திருவள்ளூர் கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் ராஜேந்திரன், நாராயணபிரசாத், பேபி சேகர், பொன் விஜயன், பூவிருந்தவல்லி நகர்மன்றத் தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத்தலைவர் ஸ்ரீதர், சென்னை மாநகராட்சி நொளம்பூர் மண்டலக் குழுத் தலைவர் ராஜன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, என்.ரவிக்குமார், முதன்மைக் கல்வி அலுவலர் சரஸ்வதி, மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## பெங்களூருவில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ரூ.2½ கோடி தங்க நகைகள்

பெங்களூரு, மே 26–

பெங்களூரு பெரு வெள்ளத்தில் நகைக் கடையில் இருந்த, சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலான தங்க நகைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூருவில் 2 நாட்களுக்கு முன்பு கனமழை கொட்டியது. இதில் நகரமே வெள்ளக்காடாக மாறியது. சுரங்கப் பாதைகள், பிரதான சாலைகள் என பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியது. கனமழை மற்றம் வெள்ளத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்கியிருந்த நிலையில், அதற்குள் சென்ற காரில் இருந்த இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், பெங்களூரு மல்லேஸ்வரத்தில் தாழ்வான இடத்தில் இருந்த நகைக் கடைக்குள்ளும் மழைநீர் புகுந்தது. இதில் கடையின் தரைத்தளத்தில் இருந்த சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலான நகைகள் மழைநீரில் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

வெள்ளத்தின் வேகத்தில் நகைகள் அடித்துச் செல்லப்பட்ட போது, கடையின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களால் எதுவும் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கடையில் இருந்த 80 சதவீத நகைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதாக கடையின் உரிமையாளர் கூறியுள்ளார்.

நகைகளை மீட்பது தொடர்பாக மாநகராட்சியிடம் நகைக்கடை உரிமையாளர் உதவி கோரியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிகளை மேம்படுத்துவது எப்படி? மேயர் பிரியா ஆய்வு

சென்னை, மே 26–

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிகளை மேம்படுத்துவது தொடர்பாக மேயர் ஆர்.பிரியா பெருங்குடி மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இன்று (26–ந் தேதி) ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள 790 பள்ளிகளில் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் சென்னை மாவட்டத்தில் ஒரு பள்ளி உட்பட 139 பள்ளிகள் சென்னை மாநகராட்சி நிர்வாகத்திடம் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஒப்படைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மேயர் ஆர்.பிரியா வார்டு 181க்கு உட்பட்ட கொட்டிவாக்கம், குப்பம் சாலையில் உள்ள செயின்ட் தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து வாரிய பள்ளியில் உள்ள பழைய பள்ளிக்கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, வார்டு 186க்கு உட்பட்ட பெருங்குடி, பள்ளி சாலையில் உள்ள பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவது தொடர்பாகவும், வார்டு 189க்கு உட்பட்ட நாராயணபுரம், தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும்,

வார்டு 191க்கு உட்பட்ட ஜல்லடியான்பேட்டை, வீராத்தம்மன் கோயில் தெருவில் உள்ள பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை கட்டுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், வார்டு 188க்கு உட்பட்ட பள்ளிக்கரணை, மயிலை பாலாஜி நகர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், சமையலறை கட்டுதல், கழிப்பிடம் மற்றும் இதர புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் மேயர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், துணை ஆணையாளர் (கல்வி) ஷரண்யா அறி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.வி. ரவிச்சந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## 8 கூட்டுறவு வங்கிகளின் உரிமம் ரத்து: ரிசர்வ் வங்கி நடவடிக்கை

டெல்லி, மே 26–

விதிமுறைகளை மீறிய 8 கூட்டுறவு வங்கிகளின் உரிமங்களை ரத்து செய்து ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டுறவு வங்கிகள் வாயிலாக கிராமப்புறங்களில் வங்கி சேவை வேகமாக விரிவடைந்து உள்ளது. இந்த வங்கிகளில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளது வெளிவருவதால், ரிசர்வ் வங்கியானது கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மார்ச் 31, 2023 முடிவடைந்த 2022–23 நிதி ஆண்டில் 8 கூட்டுறவு வங்கிகளின் உரிமங்களானது ரத்து செய்யப்பட்டுள்ளது. விதிகளை கடைப்பிடிக்காத வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியானது 100 முறைக்கு மேல் அபராதம் விதித்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், லட்சுமி கூட்டுறவு வங்கி, மிலாத் கூட்டுறவு வங்கி, ஸ்ரீ ஆனந்த் கூட்டுறவு வங்கி, ரூபாய் கூட்டுறவு வங்கி, டெக்கான் நகர்ப்புற கூட்டுறவு வங்கி, முதோல் கூட்டுறவு வங்கி, சேவா விகாஸ் கூட்டுறவு வங்கி, பாபாஜி தேதி மகிளா அர்பன் வங்கி உள்ளிட்ட 8 கூட்டுறவு வங்கிகளின் உரிமத்தை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளது.

போதுமான மூலதனம், வங்கி ஒழுங்கு முறை விதிகளுக்கு இணங்காத நிலை உள்ளிட்ட காரணங்களால் மேற்கண்ட வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியானது உரிமத்தினை ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.


### ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்

CIN: L36999TN1961PLC004606

பதிவு அலுவலகம்: ‘‘எஸ்வின் ஹவுஸ்", 13, பழைய மகாபலிபுரம் ரோடு, பெருங்குடி, சென்னை–600 096.

Phone: 044-24960335/43063545, E-mail: hebcnn@highenergy.co.in

Investor Grievance ID: investor@highenergyltd.com Website: www.highenergy.co.in

**62வது வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றி கம்பெனியின் பங்குதாரர்களின் கவனத்திற்கான அறிவிப்பு**

1. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு
வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை மேற்கொள்ள, கம்பெனிகள் சட்டம் 2013 பொருந்தக்கூடிய விதிகள், MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகள் ஆகியவற்றின்படி கம்பெனியின் 62வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) சனிக்கிழமை, 24 ஜூன், 2023 அன்று காலை 11.00 மணிக்கு காணொலி காட்சி (VC)/ பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. ஆவண சேவைகள்
டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DPs)/பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவர் (RTA) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கு மேற்கண்ட MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளின்படி 62வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, நிதி அறிக்கைகள், குழு அறிக்கை, தணிக்கையாளர் அறிக்கை மற்றும் இதர தேவையான ஆவணங்கள் அடங்கிய 2022–2023 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையின் மின்னணு நகல் அனுப்பி வைக்கப்படும். இந்த ஆவணங்கள் கம்பெனியின் இணையதளம் (www.highenergy.co.in) மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளமான BSE Ltd (www.bseindia.com)ல் கிடைக்கும். இருப்பினும், வருடாந்திர அறிக்கையின் காகித நகல் உறுப்பினர்(கள்) கோரிக்கையின் பேரில் ‘தனிப்பட்ட சூழலின்’ அடிப்படையில் கிடைக்கும். காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனி/ பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருடன் (RTA) புதுப்பிக்குமாறு கோரி, கம்பெனி 17 பிப்ரவரி 2023 அன்று கடிதம் ஒன்றை அனுப்பியது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறோம்.
3. பங்கேற்கும் முறை
காணொலி காட்சி (VC)/ பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) மூலம் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், அதன் விவரங்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கம்பெனியால் வழங்கப்படும். கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 103–ன் கீழ் VC/OAVM மூலம் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்ச நோக்கத்திற்காக கணக்கிடப்படும்.
4. மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்தல்/புதுபிப்பிக்கும் முறை
உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை முன்பே பதிவு செய்யவில்லை/ புதுப்பிக்கவில்லை எனில் உடனடியாக அதனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்:
a) டிமேட் முறையில் வைத்திருக்கும் பங்குகளின் விஷயத்தில், அந்தந்த டிபிக்களுடன்.
b) காகித முறையில் பங்குகள் இருந்தால் போலியோ எண்ணின் விவரங்களுடன் பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகலை இணைத்து investor@cameoindia.comல் எங்கள் ஆர்டிஏ மெசர்ஸ் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டிற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். 2022–2023 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையை மின்னஞ்சல் மூலம் பெற, "புத்தக மூடல் கட்ஆஃப் தேதிக்கு", அதாவது 16 ஜூன் 2023க்கு முன், மேலே உள்ள ஆவணங்களை RTAக்கு அனுப்புமாறு பங்குதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.
5. மின்னணு வாக்குப்பதிவு
வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்வதற்கான மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) வசதியை CDSL கம்பெனி வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலம் புதன்கிழமை, 21 ஜூன் 2023 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கி வெள்ளிக்கிழமை, 23 ஜூன், 2023 அன்று மாலை 5.00 மணிக்கு நிறைவடைகிறது. கூடுதலாக, வருடாந்திர பொதுக்கூட்டம் நடக்கும் நேரத்தில் மின்னணுவாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்கும் வசதியையும் கம்பெனி வழங்குகிறது. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்க மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்)/மின்னணு வாக்குப்பதிவிற்கான (வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது) விரிவான விவரங்கள் 62வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது.
6. டிவிடெண்ட்
ஒவ்வொன்றும் ரூ.2/– மதிப்புள்ள சம பங்குகளுக்கு 2022–2023–ம் நிதி ஆண்டுக்கு டிவிடெண்ட் ரூ.3.50/–வழங்க இயக்குனர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது. உறுப்பினர்கள் அவர்களின் வங்கி கணக்கு விவரங்களை முறையே அவர்களின் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DP) (டிமேட் வடிவில் பங்குகள் வைத்திருந்தால்)/ஆர்டிஏ (காகித வடிவில் பங்குகள் வைத்திருந்தால்) ஆகியோரிடம் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். டிவிடெண்ட் வருவாய்க்கான வரி பங்குதாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும், வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள விவரங்களின்படி அவர்களின் வரி நிலை குறித்த விவரங்கள்/விலக்கு ஆகியவற்றை பதிவு செய்யுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. முழு உள்ளடக்கம் மற்றும் விவரங்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பைப் பார்க்குமாறு உறுப்பினர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து கம்பெனிக்கு (hebcnn@highenergy.co.in / investor@highenergyltd.com) எழுதலாம்/மின்னஞ்சல் அனுப்பலாம்

(குழுவின் ஆணைப்படி)
V. ஆனந்த சுப்பிரமணியன்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 25.05.2023


## கூலித் தொழிலாளி வங்கிக் கணக்கில் ரூ.100 கோடி பணம்: கிராமமே அதிர்ச்சி

கொல்கத்தா, மே 26–

மேற்கு வங்கத்தில் தினக்கூலியாக வேலை செய்து வாழ்ந்து வந்தவர் வங்கி கணக்கில் ரூ.100 கோடி பணம் டெபாசிட் ஆன சம்பவம் அதிர்ச்சியையும், ஆச்சர்யத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

சில பண பரிவர்த்தனைகள் தவறுதலாக வேறு வங்கி கணக்கில் செலுத்தப்படுவது அடிக்கடி நடக்கிறது. சில சமயம் சிலரது வங்கி கணக்கில் லட்சங்களில் பணம் டெபாசிட் ஆகும்போது அது பிரதமர் வங்கி கணக்கில் அளித்த பணம் என்று எண்ணி பலரும் செலவு செய்து விடும் சம்பவங்களும் நடக்கின்றன. அப்படியாக ஒரு ஏழை கூலித்தொழிலாளி கணக்கில் ரூ.100 கோடி பணம் டெபாசிட் ஆகியுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் முர்ஷிதாபாத்தில் உள்ள பாசுதேப்பூர் என்ற கிராமத்தை சேர்ந்தவர் முகமது நசிருல்லா மண்டல். கூலித் தொழிலாளி யான இவர் தினசரி கிடைக்கும் வருமானத்தை கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். வங்கியில் கணக்கு இருந்தாலும் அதில் இருந்த தொகை வெறும் ரூ.17 மட்டுமே.

இந்நிலையில், திடீரென அவரது வீட்டிற்கு வந்த சைபர் செல் காவல் துறையினர் அவரது வங்கி கணக்கில் ரூ.100 கோடி இருப்பதாகவும், அது எப்படி கிடைத்தது என அவர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கூறி வீட்டில் நோட்டீஸ் ஒட்டியதுடன், மே 30 ந்தேதி நேரில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளனர். மேலும் அவரது வங்கி கணக்கும் முடக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முகமது நசிருல்லா மண்டல் "காவல்துறையினர் அழைத்ததும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனக்கு தூக்கமே வரவில்லை. நான் என்ன தவறு செய்தேன் என்று எனக்கு தெரியவில்லை. எனது வங்கி கணக்கில் ரூ.100 கோடி இருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை என்று கூறியுள்ளார். கூலித்தொழிலாளி வங்கி கணக்கில் ரூ.100 கோடி இருப்பது அக்கிராமத்தினரை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.

## தமிழ்நாட்டில் நேற்று 13 பேருக்கு கொரோனா

சென்னை, மே.26–

தமிழ்நாட்டில் நேற்று 13 பேர் கொரோனா பாதிப்பு அடைந்து உள்ளனர். இதில் 6 ஆண்கள் மற்றும் 7 பெண்கள் அடங்குவார்கள். அதிகபட்சமாக கோவையில் 3 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் மேலும் வெளிநாட்டுப்பயணி ஒருவர் உள்பட மொத்தம் 9 மாவட்டங்களில் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 14 பேர் குணம் அடைந்தனர். சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 86 ஆக உள்ளது. தமிழ்நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று உயிரிழப்பு எதுவும் இல்லை.

மேற்கண்ட தகவல் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


### சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்

**பதிவு அலுவலகம்:** B-11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி 601 201

**கார்ப்பரேட் அலுவலகம்:** எண்.66, நியூ ஆவடி ரோடு, 2வது தளம், எஸ்2, குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010

Tel:+91 44 2660 1313 | E-mail: southernlatexltd@yahoo.com | Website: www.southernlatex.in | CIN: L25199TN1989PLC017137

**பிற்சேர்க்கை I**

**பத்திரிகையில் பிரசுரிக்கும் வகைக்கான படிவம் (தனியானது / ஒருங்கிணைந்தது)**

**(செபி (எல்ஓடிஆர்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 47(1)(b)ஐ பார்க்கவும்)** (ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த நடப்பு ஆண்டு 31.03.2023 | முடிந்த கடந்த ஆண்டு 31.03.2022 | முடிந்த காலாண்டு 31.03.2023 | முடிந்த காலாண்டு 31.03.2022 |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் (இதர வருமானம் உட்பட) | 53.90 | 48.32 | 35.90 | 35.90 |
| 2. | நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | 29.11 | 24.67 | 25.23 | 22.96 |
| 3. | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 29.11 | 24.67 | 25.23 | 22.96 |
| 4. | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | 23.51 | 19.92 | 19.63 | 18.21 |
| 5. | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது) | 23.51 | 19.92 | 19.63 | 18.21 |
| 6. | சம பங்கு மூலதனம் | 735.92 | 735.92 | 735.92 | 735.92 |
| 7. | முந்தைய ஆண்டின் பேலன்ஷீட்படி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வு நீங்கலானது) | (105.42) | (128.93) | (105.42) | (128.93) |
| 8. | பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/-) (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது) 1. அடிப்படை | 0.320 | 0.271 | 0.267 | 0.247 |
| | 2. திட்டம் குறைந்தது | 0.320 | 0.271 | 0.267 | 0.247 |

**குறிப்பு :**

a) மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். காலாண்டு/வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களிலும் மற்றும் www.southernlatex.in–லும் காணலாம்.
b) இந்த்-ஏஎஸ் விதிகள் / ஏஎஸ் விதிகளின்படி, எது பொருந்துமோ அதற்கேற்ப லாபம் மற்றும் நஷ்ட அறிக்கையில் விலக்கு பெற்ற இனங்கள் மற்றும்/அல்லது சிறப்பு ரகங்கள் சரி செய்யப்பட்டுள்ளது.
c) கம்பெனியின் செயல்பாடுகள் ஒரே ஒரு பகுதியான நார் விற்பனையில் மட்டுமே உள்ளது.
d) மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது. அது 25.05.2023 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் இந்த நிதி முடிவுகள் குறித்து தங்கள் மாற்றப்படாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.
e) புள்ளிவிவரங்கள் அவற்றை ஒப்பிடுவதற்கு தேவையான இடங்களில் தொகுக்கப்பட்டுள்ளன

சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக
நீலகண்ட பிள்ளை
நிர்வாக இயக்குனர்
DIN:00084550

இடம் : சென்னை
தேதி : 26.05.2023



### Manali Petrochemicals Limited

MANALI PETROCHEMICALS

Registered Office: “SPIC House”, No. 88, Mount Road, Guindy, Chennai - 600 032.

CIN: L24294TN1986PLC013087
Website: www.manalipetro.com
Telefax: 044 - 2235 1098
E-mail: companysecretary@manalipetro.com

**EXTRACT FROM THE STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED 31.03.2023**

[₹ in Lakh]

| Particulars | Consolidated | | | |
|---|---|---|---|---|
| | Quarter ended | | Year ended | |
| | 31.03.2023 | 31.03.2022 | 31.03.2023 | 31.03.2022 |
| | Audited | | | |
| Total Income from Operations | 33,352 | 41,385 | 1,18,130 | 1,67,194 |
| Net Profit for the period (before Tax, Exceptional and Extraordinary Items) | 242 | 10,120 | 6,997 | 51,727 |
| Net Profit for the period before Tax (after Exceptional and Extraordinary Items) | 242 | 9,834 | 6,997 | 51,058 |
| Net Profit for the period after Tax (after Exceptional and Extraordinary Items) | (45) | 7,393 | 5,067 | 38,110 |
| Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after Tax) and Other Comprehensive Income (after Tax)] | 272 | 7,009 | 5,694 | 37,628 |
| Equity Share Capital (Face value of ₹ 5/- each) | 8,603 | 8,603 | 8,603 | 8,603 |
| Other Equity excluding Revaluation Reserves as at 31st March | | | 95,835 | 94,441 |
| Earnings Per Share of ₹ 5/- each (Basic and Diluted) | (0.03) | 4.30 | 2.95 | 22.16 |

**Note:**

1. Additional information on Standalone Financial Results pursuant to proviso to Reg. 47 (1) (b):

| Particulars | Quarter ended | | Year ended | |
|---|---|---|---|---|
| | 31.03.2023 | 31.03.2022 | 31.03.2023 | 31.03.2022 |
| | Audited | | | |
| Total Income from operations | 26,639 | 36,089 | 1,03,327 | 1,44,367 |
| Profit Before Tax | 225 | 9,608 | 6,720 | 50,460 |
| Profit After Tax | 133 | 7,194 | 5,081 | 37,669 |
| Total Comprehensive Income | 277 | 7,019 | 5,217 | 37,500 |

2. The Board of Directors has recommended a dividend of ₹ 0.75 (15%) per share on 17,19,99,229 equity shares of ₹ 5/- each for the financial year 2022-23, subject to approval of Members at the Annual General Meeting.
3. The figures for quarter ended 31st March are the balancing figures between audited annual figures in respect of the full financial year and the published year-to-date figures up to the third quarter of the previous financial year.
4. The above is an extract of the detailed format of quarterly results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results is available in the website of the Company www.manalipetro.com and the websites of the Stock Exchanges.

**NSE URL** - https://www.nseindia.com/get-quotes/equity?symbol=MANALIPETC
**BSE URL** - https://www.bseindia.com/stock-share-price/manali-petrochemical-ltd/manalipetc/500268/

By order of the Board
For Manali Petrochemicals Limited
R Chandrasekar
*Whole-Time Director and Chief Financial Officer*
DIN: 06374821

Place : Chennai
Date : May 25, 2023



### ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB®

CIN: L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம்: மனை எண்.13, 3வது பிரதான சாலை, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை 600 058.

தொலைபேசி எண்: 044–4228 1100, | இ–மெயில் investor.relations@esab.co.in

**31 மார்ச், 2023–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்**

ரூ. லட்சத்தில் (இ.பி.எஸ். தவிர)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு மார்ச் 31, 2023 தணிக்கையானது | முடிந்த காலாண்டு டிசம்பர் 31, 2022 தணிக்கையாகாதது | முடிந்த காலாண்டு மார்ச் 31, 2022 தணிக்கையானது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2023 தணிக்கையானது | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2022 தணிக்கையானது |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 30,469 | 27,055 | 26,594 | 1,09,860 | 90,098 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 5,645 | 4,857 | 2,864 | 18,229 | 11,356 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 5,645 | 4,857 | 2,864 | 18,229 | 11,356 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 4,186 | 3,631 | 2,133 | 13,568 | 8,431 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது) | 4,230 | 3,631 | 2,207 | 13,612 | 8,505 |
| 6 | சம பங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | |
| | அடிப்படை | 27.20 | 23.60 | 13.86 | 88.16 | 54.78 |
| | பலமிழந்தது | 27.20 | 23.60 | 13.86 | 88.16 | 54.78 |

குறிப்பு: செபி கட்டுப்பாடுகள், 2015–ன் கீழ் (பட்டியல் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 33–ன் கீழ் 31 மார்ச், 2023–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு விவரத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட முடிவுகளின் முழு விவரம் கம்பெனியின் இணையதளம் www.esabindia.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் - பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளத்தில் கிடைக்கும்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டிற்காக
ரோஹித் கம்பீர்
நிர்வாக இயக்குனர்

சென்னை
மே 25, 2023

“Shaping the world we imagine”
Visit our website : http://www.esabindia.com